2018-ம் வருடம் மார்ச்.மாதம் 7-ம் தேதி புதன்கிழமை காலை 11.00மணிக்கு நடைபெற்ற கூட்ட நடவடிக்கையின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.எல்.குமார்.பி.இ.
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

----------

1. இந்நகராட்சியில் 2018-2021-வரை மூன்று ஆண்டுகளுக்கு **வாரச்சந்தை கூடுமிடத்தில் சுங்கம் வசூல்** செய்யும் உரிமைக்கு அரசாணை (நிலை) எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்: 19.09.2008-ன்படி, 2018-2021-வரை மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமத்திற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையின்படி, **01.04.2018 முதல் 31.03.2019 வரை (ஓராண்டுக்கு)** குத்தகையை வசூல் செய்துக்கொள்ள ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் **15.02.2018** அன்று கோரப்பட்டமைக்கு கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் பொதுஏலம் விவரத்தினை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**வரப்பெற்ற ஓப்பந்தப்புள்ளிகள்- 2 ( இருவர் மட்டும்)**

| **வ. எண்.** | **பெயர் மற்றும் முகவரி திருவாளர்கள்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.** |
|---|---|---|
| 1 | கே.ரமேஷ் த/பெ குழந்தை கவுண்டர், 3வது தார்வழி, ஆம்பூர் | **ரூ.38,501/-** |
| 2 | சி.ரவி த/பெ சின்னசாமி, 38, 3வது தார் வழி வீதி, ஆம்பூர். | **ரூ.37,500/-** |

**பொதுஏலத்தில் கலந்துக்கொண்டவர்-1 (ஒருவர் மட்டும்)**

| **வ. எண்.** | **பெயர் மற்றும் முகவரி திருவாளர்கள்** | **ஏலகேள்வித்தொகை ரூ.** |
|---|---|---|
| 1 | வி.இராமகிருஷ்ணன், 61/7, ரெட்டிதோப்பு முதல் தெரு, ஆம்பூர் | ஏலம் கோரவில்லை |

**அலுவலக குறிப்பு :** -

**2017-18ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ. 32,524/-**
**மூன்று ஆண்டு சராசரி குத்தகை தொகை ரூ. 31,000/-**

மேற்படி குத்தகை இனத்திற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் பொதுஏலத்தில், உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய வரிசை எண்.1 **திரு.கே.ரமேஷ்,** அவர்களின் ஒப்பந்தப்புள்ளி **ரூ.38,501/-**ஆகும். **சென்ற ஆண்டு** குத்தகை தொகையை விட **ரூ.5,977/-** கூடுதலாகவும், கடந்த **3 ஆண்டு சராசரி** தொகையை விட **ரூ.7,501/-** கூடுதலாகவும் உள்ளது. எனவே, **திரு.கே.ரமேஷ்,** அவர்களின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.அ1/1424-1/2017**

தீர்மான எண்.313: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

2. இந்நகராட்சியில் 2018-2021-வரை மூன்று ஆண்டுகளுக்கு **மாடு அறுக்கும் இடத்தில் சுங்கம் வசூல்** செய்யும் உரிமைக்கு அரசாணை (நிலை) எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்: 19.09.2008-ன்படி, 2018-2021-வரை மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமத்திற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையின்படி, **01.04.2018 முதல் 31.03.2019 வரை (ஓராண்டுக்கு)** குத்தகையை வசூல் செய்துக்கொள்ள ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் **15.02.2018** அன்று கோரப்பட்டமைக்கு கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் பொதுஏலம் விவரத்தினை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள்- 1 ( ஒன்று மட்டும்)</u>

| **வ. எண்.** | **பெயர் மற்றும் முகவரி திருவாளர்கள்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.** |
|---|---|---|
| 1 | வி.இராமகிருஷ்ணன், 61/7,ரெட்டிதோப்பு முதல் தெரு,ஆம்பூர் | **ரூ.1,57,769/-** |

<u>பொதுஏலத்தில் கலந்துக்கொண்டவர்-2 (இருவர் மட்டும்)</u>

| **வ. எண்.** | **பெயர் மற்றும் முகவரி திருவாளர்கள்** | **ஏல கேள்வித் தொகை ரூ.** |
|---|---|---|
| 1 | வி.இராமகிருஷ்ணன், 61/7, ரெட்டிதோப்பு முதல் தெரு, ஆம்பூர் | **ரூ.1,52,000/-** |
| 2 | ஏ.காந்தி, 4/31, ஸ்டோர் தெரு, கஸ்பா “பி”, | **ரூ.1,51,000/-** |

| | | |
|---|---|---|
| | ஆம்பூர் | |

<u>அலுவலக குறிப்பு :</u> -

**2017-18ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ. 1,37,261/-**

**மூன்று ஆண்டு சராசரி குத்தகை தொகை ரூ. 1,30,829/-**

மேற்படி குத்தகை இனத்திற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொதுஏலத்தில், உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய **திரு.வி.இராமகிருஷ்ணன்,** அவர்களின் ஒப்பந்தப்புள்ளி **ரூ.1,57,769/-**ஆகும். **சென்ற ஆண்டு** குத்தகை தொகையை விட **ரூ.20,508/-** கூடுதலாகவும், கடந்த **3 ஆண்டு சராசரி** தொகையை விட **ரூ.26,940/-** கூடுதலாகவும் உள்ளது. எனவே, **திரு.வி.இராமகிருஷ்ணன்,** அவர்களின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.அ1/1424-3/2017**

தீர்மான எண்.314: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

3. இந்நகராட்சியில் 2018-2021-வரை மூன்று ஆண்டுகளுக்கு **நகராட்சி எல்லைக்குள் சாலை ஓரங்களில் வியாபாரம் செய்வதை ஒழுங்குபடுத்தி சுங்கம் வசூல்** செய்யும் உரிமைக்கு அரசாணை (நிலை) எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்: 19.09.2008-ன்படி, 2018-2021-வரை மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமத்திற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையின்படி, **01.04.2018 முதல் 31.03.2019 வரை (ஓராண்டுக்கு)** குத்தகையை வசூல் செய்துக்கொள்ள ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் **15.02.2018** அன்று கோரப்பட்டமைக்கு கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் பொதுஏலம் விவரத்தினை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**<u>ஓப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை</u>**

<u>பொதுஏலத்தில் கலந்துக்கொண்டவர்-2 (இருவர் மட்டும்)</u>

| **வ. எண்.** | **பெயர் மற்றும் முகவரி திருவாளர்கள்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.** |
|---|---|---|
| 1 | கே.சீனிவாசன் த/பெ சி.கிருஷ்ணன்,<br>26, குமரேசன் தெரு, ஆம்பூர் | **ரூ.4,85,000/-** |
| 2 | டி.ஜே.சரவணன்,<br>60/22, கஸ்பா மெயின் ரோடு, ஆம்பூர் | **ரூ.4,90,000/-** |

<u>அலுவலக குறிப்பு :</u> -

**2017-18ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ. 4,66,247/-**
**மூன்று ஆண்டு** சராசரி **குத்தகை தொகை ரூ. 4,44,397/-**

மேற்படி குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கோரிய வரிசை எண்.2 **திரு.டி.ஜே.சரவணன்,** அவர்களின் ஒப்பந்தப்புள்ளி **ரூ.4,90,000/-**ஆகும். **சென்ற ஆண்டு** குத்தகை தொகையை விட **ரூ.23,753/-** கூடுதலாகவும், கடந்த **3 ஆண்டு சராசரி** தொகையை விட **ரூ.45,603/-** கூடுதலாகவும் உள்ளது. எனவே, **திரு.டி.ஜே.சரவணன்,** அவர்களின் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.அ1/1424-4/2017**

தீர்மான எண்.315: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4. இந்நகராட்சியில் **2018-2021-வரை** மூன்று ஆண்டுகளுக்கு **நகராட்சி பேருந்து நிலையத்தில் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூல்** செய்யும் உரிமைக்கு அரசாணை (நிலை) எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்: 19.09.2008-ன்படி, 2018-2021-வரை மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமத்திற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையின்படி, **01.04.2018 முதல் 31.03.2019 வரை (ஓராண்டுக்கு)** குத்தகையை வசூல் செய்துக்கொள்ள ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் **15.02.2018** அன்று கோரப்பட்டமைக்கு கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் பொதுஏலம் விவரத்தினை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள்- 2 ( இரண்டு மட்டும்)</u>

| **வ. எண்.** | **பெயர் மற்றும் முகவரி**<br>**திருவாளர்கள்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.** |
|---|---|---|
| 1 | எஸ்.மாணிக்கம்,<br>4,இடையர் வீதி, கஸ்பா “ஏ” ஆம்பூர் | **ரூ.11,80,000/-** |
| 2 | எம்.நேதாஜி,<br>16,கஸ்பா “ஏ” மெயின் ரோடு, ஆம்பூர் | **ரூ.11,80,900/-** |

**<u>பொதுஏலத்தில் எவரும் கலந்துக்கொள்ளவில்லை</u>**

<u>அலுவலக குறிப்பு :</u> -

**2017-18ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ. 11,24,550/-**

**மூன்று ஆண்டு** சராசரி **குத்தகை தொகை ரூ. 10,71,850/-**

மேற்படி குத்தகை இனத்திற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய வரிசை எண்.2 **திரு.எம்.நேதாஜி,** அவர்களின் ஒப்பந்தப்புள்ளி **ரூ.11,80,900/-**ஆகும். **சென்ற ஆண்டு** குத்தகை தொகையை விட **ரூ.56,350/-** கூடுதலாகவும், கடந்த **3 ஆண்டு சராசரி** தொகையை விட **ரூ.1,09,050/-** கூடுதலாகவும் உள்ளது. எனவே, **திரு.எம்.நேதாஜி**, அவர்களின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.அ1/1424-5/2017**

தீர்மான எண்.316: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5. இந்நகராட்சியில் **2018-2021-வரை** மூன்று ஆண்டுகளுக்கு **நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் சுங்கம் வசூல்** செய்யும் உரிமைக்கு அரசாணை (நிலை) எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்: 19.09.2008-ன்படி, 2018-2021-வரை மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமத்திற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையின்படி, **01.04.2018 முதல் 31.03.2019 வரை (ஓராண்டுக்கு)** குத்தகையை வசூல் செய்துக்கொள்ள ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் **15.02.2018** அன்று கோரப்பட்டமைக்கு கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் பொதுஏலம் விவரத்தினை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>**வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள்- 2 ( இரண்டு மட்டும்)**</u>

| **வ. எண்.** | **பெயர் மற்றும் முகவரி திருவாளர்கள்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.** |
|---|---|---|
| 1 | பி.இரவி த/பெ புண்ணியமூர்த்தி,<br>கட்டை மேடு, ஆம்பூர் | **ரூ.2,40,000/-** |
| 2 | எம்.சுரேஷ் த/பெ மாயவன்,<br>56, கட்டை மேடு 2வது தெரு, ஆம்பூர் | **ரூ.2,73,000/-** |

<u>**பொதுஏலத்தில் எவரும் கலந்துக்கொள்ளவில்லை**</u>

<u>**அலுவலக குறிப்பு :**</u> -

**2017-18ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ. 2,59,804/-**
**மூன்று ஆண்டு சராசரி குத்தகை தொகை ரூ.2,47,629/-**

மேற்படி குத்தகை இனத்திற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய வரிசை எண்.2 **திரு.எம்.சுரேஷ் த/பெ மாயவன்,** அவர்களின் ஒப்பந்தப்புள்ளி **ரூ.2,73,000/-**ஆகும். **சென்ற ஆண்டு** குத்தகை தொகையை விட **ரூ.13,196/-** கூடுதலாகவும்,

கடந்த 3 **ஆண்டு சராசரி** தொகையை விட **ரூ.25,371/-** கூடுதலாகவும் உள்ளது. எனவே, **திரு. எம்.சுரேஷ் த/பெ மாயவன்,** அவர்களின் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.அ1/1424-6/2017**

தீர்மான எண்.317: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

6. இந்நகராட்சியில் **2018-2021-வரை** மூன்று ஆண்டுகளுக்கு **நகராட்சி ஆசானம்பட்டு பகுதியில் உள்ள புளியமர மகசூல் அனுபவிக்கும்** உரிமைக்கு அரசாணை (நிலை) எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்: 19.09.2008-ன்படி, 2018-2021-வரை மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமத்திற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையின்படி, **01.04.2018 முதல் 31.03.2019 வரை (ஓராண்டுக்கு)** குத்தகையை வசூல் செய்துக்கொள்ள ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் **15.02.2018** அன்று கோரப்பட்டமைக்கு கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் பொதுஏலம் விவரத்தினை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை**

**பொதுஏலத்தில் கலந்துக்கொண்டவர்-2 (இருவர் மட்டும்)**

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி திருவாளர்கள் | ஏலகேள்வி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | வி.இராமகிருஷ்ணன்,<br>61/7,ரெட்டிதோப்பு முதல் தெரு, ஆம்பூர் | **ரூ.2,900/-** |
| 2 | வி.மணிமேகலை த/பெ வீரராகவன்,<br>61/4,ரெட்டிதோப்பு முதல் தெரு, ஆம்பூர் | **ரூ.2,850/-** |

**அலுவலக குறிப்பு :** -

**2017-18ம் ஆண்டின் குத்தகை தொகை ரூ. 2,756/-**
**மூன்று ஆண்டு சராசரி குத்தகை தொகை ரூ.2,627/-**

மேற்படி குத்தகை இனத்திற்கு பொதுஏலத்தில், உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கோரிய வரிசை எண்.1 **திரு. வி.இராமகிருஷ்ணன்,** அவர்களின் ஒப்பந்தப்புள்ளி **ரூ.2,900/-**ஆகும். **சென்ற ஆண்டு** குத்தகை தொகையை விட **ரூ.144/-** கூடுதலாகவும், கடந்த 3 **ஆண்டு சராசரி** தொகையை விட **ரூ.273/-** கூடுதலாகவும் உள்ளது. எனவே, **திரு.வி.இராமகிருஷ்ணன்,** அவர்களின் உயர்ந்தபட்ச ஏலகேள்வி தொகையை மன்ற ஏற்கலாம்.

**ந.க.எண்.அ1/1424-7/2017**

தீர்மான எண்.318: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

7. இந் நகராட்சிக்கு சொந்தமான கஸ்பா.பி.நகராட்சி துவக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கான கழிவறையினை புதியதாக அமைத்திடவும், ஏற்கனவே உள்ள பழைய கழிவறை மற்றும் சிறுநீர் கழிப்பிடத்தினை மராமத்து பணி மேற்க்கொள்ளவும், நகராட்சி பள்ளியின் வகுப்பறையில் பழைய பழுதடைந்துள்ள கதவு. ஜன்னல்களுக்கு மாற்றாக புதிய ஜன்னல் மற்றும் கதவினை பொருத்திடவும், பள்ளிக்கட்டிடம் முழுவதும் புதியதாக வர்ணம் அடித்திடவும் மற்றும் பள்ளிச் சுற்றுச்சுவரில் தேசத் தலைவர்களின் படங்களை வண்ணப் படங்களாக வரைந்திடவும் அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.6.75இலட்சம் (ரூபாய் ஆறு லட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு: அ. அங்கீகாரம் வழங்கலாம்.மேற்படி பணினை வருவாய் நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் வழங்கலாம்.
ந.க.எண்.206/2018/இ1
தீர்மான எண்.319: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

8. இந் நகராட்சிக்கு சொந்தமாமன கோவிந்தாபுரம் நடுநிலைப்பள்ளியில் அமைந்துள்ள கழிவறை கட்டிடத்தின் உயரம் குறைவாக உள்ளதால், பள்ளிக்கு அருகாமையில் உள்ள கட்டிடங்களில் இருந்து கழிவறை பார்க்கும் வண்ணம் உள்ளதால், மேற்படி கழிவறைக்கு மேற்கூரை அமைத்து கழிவறையினை மராமத்து பணிகள் மேற்க்கொள்ளவும், பள்ளியின் முகப்பு வாயிலில் உள்ள பிரதான கட்டிடத்தின் கூரைகளில் தண்ணீர் ஊறுவதால் மேற்கண்ட கூரையின் மேல்தளத்தில் பழுதடைந்துள்ள Weathering Course மற்றும; pressed tiles ஆகியவற்றை அப்புறப்படுத்திவிட்டு புதியதாக அமைக்கவும், பள்ளியின் வகுப்பறைகள், ஒருங்கிணைந்த குழந்தைகள் நல மையம் மற்றும் சத்துணவு மையம் ஆகியவற்றிற்கு புதியதாக வர்ணம் பூசிடவும் அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.7.90லட்சத்திற்கு (ரூபாய் ஏழு லட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு: அ. அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணினை வருவாய் நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் வழங்கலாம்.
ந.க.எண்.207/2018/இ1
தீர்மான எண்.320: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

9. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திரு.எம்.பாஸ்கர், துப்புரவு அலுவலர் அவர்கள் இயக்குனர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்பத்தூர் அவர்களின் கடித ந.க.எண்.4428/2017/அ3, நாள் 6.10.2017ல் மேற்படி துப்புரவு அலுவலரை (EPIDEMOLOGY) தொற்றுநோய் தடுப்புமுறை முயற்சியில் கலந்துக்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சியில் கலந்துக்கொள்ள (27.02.2018, 28.02.2018 மற்றும் 01.03.2018) ஆகிய மூன்று நாட்கள் துப்புரவு அலுவலர் அவர்களுக்கு இவ்வலுவலக செயல்முறை கடிதம் ந.க.எண்.270/2017/எச்1, நாள் 26.02.2018ம் தேதி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பயிற்சியில் கலந்துக்கொள்ள ரூ.2847/- பயிற்சி கட்டணம் வழங்க அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அ. பயிற்சி கட்டணம் ரூ.2847/- வழங்கியமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.
ஆ. மேற்படி பயிற்சி கட்டணம் பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.
ந.க.எண்.270/2018/எச்1

தீர்மான எண்.321: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

10.	இந்நகராட்சி உரக்கிடங்கு நிலம் கிரயம் கொடுத்த திரு.மோகன் என்பவரின் வாரிசுதாரர்களான மைனர் 1.கார்த்திகா 2.திலீப்குமார் ஆகிய இருவர் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு எண்.ஓ.எஸ்.எண்.100/19, ஐ.ஏ.எண்.266/14, ஐ.ஏ.397/14 மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆம்பூரில் மேற்படி வழக்குகளை எதிர்த்து வாதாடவும் வழக்கறிஞர் கட்டணம் ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)

மேலும் மேற்படி வழக்கு சம்மந்தமாக வழக்கு எண்.ஓ.எஸ்.எண்.120/2009(ம) ஐ.ஏ.எண்.1/15 துணை நீதிமன்றம், வாணியம்பாடி மேற்படி வழக்குகளை எதிர்த்து வாதாடவும் வழககறிஞர் கட்டணம் ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) மேற்படி வழக்கு சம்மந்தமாக மொத்தம் ரூ.10000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) நகராட்சி வழக்கறிஞருக்கு வழங்க அங்கீகாரம் வழங்கலாம்.
அலுவலகக்குறிப்பு: அ. அங்கீகாரம் வழங்கலாம்.
ஆ. மேற்படி வழக்கறிஞருக்கு ரூ.10000/-மட்டும் வருவாய் நிதியிலிருந்து வழங்க அங்கீகாரம் கோரப்படுகிறது.

ந.க.எண்.1302/2014/எச்1
தீர்மான எண்.322: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

11.	இந்நகராட்சிக்கு எதிராக திரு.ரபீக் அஹமத் தொடரப்பட்ட நியூசன்ஸ் வழக்கு எண்.104/14 மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஆம்பூரில் மேற்படி வழக்கினை எதிர்த்து வாதாடவும் வழக்கறிஞர் கட்டணம் ரூ.4000/- (ரூபாய் நான்காயிரம் மட்டும்) வழங்க அங்கீகாரம் கோரப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு: அ. அங்கீகாரம் வழங்கலாம்.
ஆ. மேற்படி வழக்கறிஞருக்கு ரூ.4000/-மட்டும் வருவாய் நிதியிலிருந்து வழங்க அங்கீகாரம் கோரப்படுகிறது.
ந.க.எண்.415/2017/எச்1
தீர்மான எண்.323: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

12.	இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திரு.ஜீனேத் அஹமத் த/பெ.என்.ஏ.நூர் அஹமத், தன்னுடைய மகளின் பிறந்த தேதி மாற்றம் செய்வது குறித்து மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஆம்பூரில் நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு எண்.ஓ.எஸ்.எண்.64/2016. மேற்படி வழக்கினை எதிர்த்து வாதாடவும் வழக்கறிஞர் கட்டணம் ரூ.4000/- (ரூபாய் நான்காயிரம் மட்டும்) வழங்க அங்கீகாரம் கோரப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு: அ. அங்கீகாரம் வழங்கலாம்.
ஆ. மேற்படி வழக்கறிஞருக்கு ரூ.4000/-மட்டும் வருவாய் நிதியிலிருந்து வழங்க அங்கீகாரம் கோரப்படுகிறது.
ந.க.எண்.6427/2011/எச்1
தீர்மான எண்.324: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

13. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மஸ்ருல் உலூம் மேல்நிலைப் பள்ளி பின்புறம் (கிழக்கு) பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாயினை உயர்த்தி ஆர்.சி.சி.மூடுசிலாப் அமைத்தல் பணியினை ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந் நகரமன்ற தீர்மான எண்.302 நாள்.2.2.2018-ல் அங்கீகாரம் வழங்கப்பட்டதின்பேரில் மேற்படி பணிக்கு 20.02.2018-ம் தேதி ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| ஒப்பந்ததாரர் பெயர்<br>திரு/திருமதி | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|
| 1. எம்.தீனதயாளன்<br><br>2. வி.பாஸ்கர் | 0.06% மதிப்பீட்டை விட குறைவு<br><br>1.15% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:** மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை வழங்கியுள்ள திரு. எம்.தீனதயாளன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1107/2017/இ1

தீர்மான எண்.325: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

14. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளான பாவேந்தர்தெரு, புதுமண்டிதெரு, வி.ஏ.கரீம் ரோடு,கஸ்பா.பி.பிரதானசாலை,அழகாபுரிமேல்நிலை நீர்தேக்க தொட்டி வளாகம் அருகில்,எஸ்.கே.ரோடு ஓடை அருகில்,நெசவுக்கார 3வது தெரு எதிர்புறம் மற்றும் கஸபா.அ.பிரதான சாலையில் உள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி அருகில் ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள பொது கழிப்பறைகளில் உள்ள பழுதுகளை சரி செய்து பராமரிப்பு பணிகளை ரூ.9.75 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந் நகரமன்ற தீர்மான எண்.303 நாள்.2.2.2018-ல் அங்கீகாரம் வழங்கப்பட்டதின்பேரில் மேற்படி பணிக்கு 01.03.2018-ம் தேதி ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| ஒப்பந்ததாரர் பெயர்<br>திரு/திருமதி | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|
| 1. எஸ்.அருணாசலம்<br><br>2. ஏ.வி.நாகராஜன் | 0.06% மதிப்பீட்டை விட குறைவு<br><br>1.20% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:** மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை வழங்கியுள்ள திரு.எஸ்.அருணாசலம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.67/2018/இ1

தீர்மான எண்.326: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

15. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பொது மக்களுக்கு குடிநீரில் அரசு உத்திரவின்படி Sodium Hypochlorite solution உரிய அளவில் கலந்து குடிநீர் விநியோகம் செய்ய வேண்டி உள்ளது. எனவே, 6 மாத காலத்திற்கு தேவையான Sodium Hypochlorite solution சப்ளை செய்யும் பணிக்கு 21.02.2018ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| ஒப்பந்ததாரர் பெயர்<br>திரு/திருமதி | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|
| 1.பநீ சபரி இன்ஜினியரிங், சென்னை.<br><br>2. பநீராஜ கணபதி இன்ஜினியரிங், ஒர்க்ஸ், சென்னை | 0.68% மதிப்பீட்டை விட குறைவு<br><br><br>1.37% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு: அங்கீகாரம் வழங்கலாம்.மேற்கண்ட பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள பநீ சபரி இன்ஜினியரிங், சென்னை அவர்களின் குறைவான ஒப்பந்தப்புள்ளியை் அங்கீகரிக்கலாம்.
ந.க.எண்.140/2018/இ2
தீர்மான எண்.327: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

16. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட பாரதியார்நகர் பகுதியில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் பழுதடைந்துள்ள ஏர்கம்ப்ரசர் மோட்டார் அகற்றி புதியதாக பொருத்தும் பணிக்கு 15.02.2018ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| ஒப்பந்ததாரர் பெயர்<br>திரு/திருமதி | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|
| 1.எஸ்.சசிகுமார்<br><br>2. எம்.உதயகுமார் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு<br><br>1.20% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு: அங்கீகாரம் வழங்கலாம்.மேற்கண்ட பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு. எஸ்.சசிகுமார்.அவர்களின் குறைவான ஒப்பந்தப்புள்ளியை் அங்கீகரிக்கலாம்.
ந.க.எண். 45/2018/இ2
தீர்மான எண்.328: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

17. இந் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் விநியோக வாகன எண். TN23W8626 வாகனத்திற்கு தகுதி சான்று பெற வாகன பழுதுகளை நீக்கும் பணிக்கு 08.02.2018ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| ஒப்பந்ததாரர் பெயர்<br>திரு/திருமதி | ஒப்பந்தப்புள்ளி தொகை<br>ரூ. |
|---|---|
| 1.தி வாலாஜாபேட் அக்ரோ என்ஜினியாங் & சர்வீஸஸ்,கோ.ஆப்ரடிவ் செண்டர் லிமிடெட், வாலாஜாபேட் | 131392.00 |
| 2. திருப்பத்துார் அக்ரோ என்ஜினியாங் & சர்வீஸஸ், கோ.ஆப்ரடிவ் செண்டர் லிமிடெட், திருப்பத்துார் | 132006.00 |

அலுவலகக்குறிப்பு: அங்கீகாரம் வழங்கலாம்.மேற்கண்ட பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி தொகை அளித்துள்ள தி வாலாஜாபேட் அக்ரோ என்ஜினியாங் & சர்வீஸஸ்,கோ.ஆப்ரடிவ் செண்டர் லிமிடெட், வாலாஜாபேட் குறைவான ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.
ந.க.எண். 1330/2017/இ2
தீர்மான எண்.329: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

18. இந் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் துாய்மை இந்தியா திட்டத்தின் கீழ், (Swachh Survekshan.2018) துாய்மையான நகராட்சிக்கான கணக்கெடுப்பு நடத்தப்பட இருப்பதையொட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 100அடிக்கு 100 லிட்டர் கொள்ளளவு கொண்ட (Twin Bin) பச்சைவண்ணம் (ம) நீல வண்ணம் ஆகிய இரு வண்ணங்களில் மக்கும்குப்பை, மக்காத குப்பை என தரம்பிரித்து சேகரிக்க வணிகம் செய்யும் வீதிகளில் ( Commercial Areas) மேற்படி பின்கள் வைக்கவும் மற்றும் இந்நகராட்சி உரக்கிடங்கு பகுதியில் இரும்பு வலை வேலி அமைக்கவும், மேற்படி இரண்டு பணிகள் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.50லட்சம் (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அ. அங்கீகாரம் வழங்கலாம்.
ஆ. மேற்படி செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியில் மேற்க்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.
இ. அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்க்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.0026/2018/எச்1

தீர்மான எண்.330: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

19. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண்.டி.என்.23ஏக்யுவ்.9873 ஜே.சி.வி.வாகனத்தில் முன்பக்கம் 2 டயார்கள், பின்பக்கம் 2 டயர்கள் பழுதடைந்துள்ளதால் மேற்படி வாகனத்தை இயக்குவதற்கு சிரமமாக உள்ளதால் அடிக்கடி பஞ்சர் ஆகிவிடுகிறது எனவே 4 டயர்கள் புதியதாக வாங்கி வழங்க அரசு அங்கீகாரம் 'பெற்ற நிறுவனமான எம்.ஆர்.எப்.டீலரான பி.ஆர்.டயர்ஸ் டீலரிடம் 16.03.2018ம் தேதியன்று ரூ.91400/-ல் விலைப்புள்ளி பெறப்பட்டது. மேலும் திடக்கழிவு மேலாண்மை அத்தியாவசியபணி என்பதால் அவசர அவசியம் கருதி மேற்படி செலவினத்திற்கு தனி அலுவலரின் முன் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அ. அனுமதிக்கலாம்.
ஆ. தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி மேற்படி பணியை மேற்கொண்டமைக்கும் அங்கீகரிக்கலாம்.
இ. மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.
ந.க.எண்.185/2018/எச்1

தீர்மான எண்.331: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

20. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண்.டி.என்.23ஏஓ்.7245 டிப்பர்லாரி வாகனத்தில் 6 டயார்கள், 6 டியுப்கள் பழுதடைந்துள்ளதால் மேற்படி வாகனம் இயக்குவதில் சிரமம் உள்ளதால் 6 டயார்கள், 6 டியுப்கள் புதியதாக வாங்கி மாற்றம் செய்ய அரசு அங்கீகரிக்கப்பட்ட எம்.ஆர்.எப்.டீலரான பி.ஆர்.டயர்ஸ் டீலரிடம் 20.03.2018ம் தேதியன்று ரூ.60,100/-ஐ ( ரூபாய் அறுபதாயிரத்து நூறு மட்டும்) விலைப்புள்ளி பெறப்பட்டது. மேலும் திடக்கழிவு மேலாண்மை அத்தியாவசியபணி என்பதால் அவசர அவசியம் கருதி மேற்படி செலவினத்திற்கு தனி அலுவலரின் முன் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அ. அனுமதிக்கலாம்.
ஆ. தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி மேற்படி பணியை மேற்கொண்டமைக்கும் அங்கீகரிக்கலாம்.
இ. மேற்கண்ட பணி மேற்கொள்ளும் செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.
ந.க.எண்.144/2018/எச்1

தீர்மான எண்.332: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

21. இந் நகராட்சியில் வார்டு மறுவரையறை மேற்கொள்ளப்பட்ட விவரத்தினை தினசரி நாளிதழில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் விளம்பரம் செய்து பொது மக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபணை தெரிவிக்கும் பொருட்டு தமிழ், மற்றும் ஆங்கில தினசரி நாளிதழில் எலிகண்ட் பப்ளிகேஷன்,சென்னை நிறுவனத்தின் மூலம் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரக் கட்டணத் தொகை ரூ.34843/-ஐ (ரூபாய் முப்பத்தி நான்காயிரத்து எண்ணூாற்று நாற்பத்தி மூன்று மட்டும்) வழங்க அங்கீகாரம் கோரப்படுகிறது. அலுவலகக்குறிப்பு: அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1312/2017/எப்1

தீர்மான எண்.333: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

22. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகத்தை சீரான முறையில் மேற்க்கொள்ளும் பொருட்டு தற்பொழுது நீரேற்றுநிலையம் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி ஆகியவற்றிலிருந்து விநியோகம் செய்யப்படும் குடிநீர் விவரத்தினை AUTO CAD மூலம் படம் வரைந்து A0 size வரைபடம் நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குனர், வேலூர் அவர்களின் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. எனவே மேற்படி பணிக்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2.00லட்சத்திற்கும் (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.208/2018/இ2

தீர்மான எண்.334: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

23. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கஸ்பா "எ" பகுதியில் NUHM திட்டத்தின் கீழ் நகர்புற சுகாதார நிலையம் புதியதாக கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.மேற்படி இடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் புதியதாக கட்டிடம் கட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் வேலூர் அவர்களிடம் வரைப்பட அனுமதி பெறும் பொருட்டு கட்டிட வரைப்படங்கள் தயார் செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.25,000/-க்கும், மேலும் மேற்படி பணிக்காக அவசர அவசியத்தை கருதி ஆணையர்(ம)தனிஅலுவலர் அவர்களின் 16.02.2018ம் தேதியன்று முன்னனுமதி வழங்கப்பட்டதின் பேரில் 23.02.2018ம் தேதி கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | Sri Lakshmi Builders No.90/1A, First Floor Bye Pass Road Ambur | S.Sridhar Banu Draughtsman civil engineer No.100 Nethaji Road Ambur | S.Sasi kumar No.84A, Nethaji Road Ambur |
|---|---|---|---|---|
| 1. | Preperation of AutoCad Drawing (1x1) | 12,000 | 13,000 | 13,500 |
| 2. | Tracing Paper Printing Charges(A1Size) (1x1) | 1,150 | 1,400 | 1,550 |
| 3. | Amoniya Print (A1 Size) (1 Paper) | 900 | 1,400 | 1,500 |

<u>அலுவலகக்குறிப்பு</u>

1 மன்றம் அனுமதி வழங்கலாம்

2 மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் திரு. Lakshmi Builders No.90/1A, First Floor Bye Pass Road Ambur அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்

3 2017-2018ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்:1017/2017/எப்1)

தீர்மான எண்.335: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**24.** இந்நகராட்சியில் சங்கலியாளராக பணிபுரியும் திரு.கோ.மதியழகன் என்பவர் எவ்விதமானமுன் அறிவிப்புமினறி**12.07.2017** முதல் பணிக்கு வராமல் உள்ளார் .அன்னார் உடன் பணியில் வந்து சேர **28.12.2017**ம் தேதி தினத்தந்தி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. விளம்பரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.**3125/–**யினை Elegant Publications,Chennai என்பவர்களுக்கு வழங்க மன்றத்தி அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> அனுமதிக்கலாம்

தீர்மான எண்.336: அனுமதிக்கப்பட்டது

25. இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான 5 எண்ணிக்கை பிரிண்டர்கள் மற்றும் பொது சுகாதாரபிரிவு திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டில் உள்ள 3 எண்ணிக்கை டம்பர் பிளேசர் வாகனங்களுக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் GPS கருவி பொருத்தும் பணிக்கு 02.03.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| நிறுவனத்தின் பெயர் மற்றும் விலாசம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|
| 1. ஜி.ஆர்.சிஸ்டம்ஸ், எஸ்.கே.ரோடு, ஆம்பூர் | 0.30% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. சிவா எலக்ட்ரானிக்ஸ், எஸ்.கே.ரோடு, ஆம்பூர் | 0.80% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு: 1. மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஜி.ஆர்.சிஸ்டம்ஸ், ஆம்பூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

2. அலுவலக பணியின் அவசர அவசியத்தை கருதி, மேற்படி பணிக்கு தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.186/2018/இ2

தீர்மான எண்.337: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

ஒம்/- எல்.குமார்.பி.இ.
தனி அலுவலர்,
ஆம்பூர் நகராட்சி.

/உண்மைநகல்/

ஆணையாளர்(பொ),
ஆம்பூர் நகராட்சி.

2018-ம் வருடம் மார்ச்.மாதம் 28-ம் தேதி புதன்கிழமை மாலை 5.00மணிக்கு நடைபெற்ற கூட்ட நடவடிக்கையின் உண்மைநகல்:
முன்னிலை: திரு.எல்.குமார்.பி.இ.
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

----------

**1.**நகராட்சி நிர்வாக ஆணையரக சுற்றிக்கை ந.க.எண்.7234/2014/ஆர்1 நாள்.15.03.2018ல் தமிழ்நாடு அரசிதழ் அறிவிப்பு நாள் 25.01.2018ன்படி நகராட்சியில் செயல்படும் அரசு கல்வி நிறுவனங்கள், நகராட்சி கல்வி நிறுவனங்கள், அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் (சுயநிதி பாடப்பிரிவுகளுக்கான கட்டிடங்களை தவிர்த்து) மற்றும் அவை சம்மந்தப்பட்ட விடுதிகள் நூலகங்கள் தவீர அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்துவரி விதிக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி நிர்ணயிக்க பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்பிக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- மேற்குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு அரசிதழின்படி, ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கி வரும் கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி நிர்ணயம் செய்யலாம்.
ந.க.எண்.250/2018/அ1

தீர்மான எண்.338: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

2.இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்குறிப்பிட்டுள்ள விவரப்படி பணிகளை மேற்கொள்ளவும் அதற்காகும் மதிப்பீடு தொகைகளுக்கும் அங்கீகாரம் கோரப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.4-ல் அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவில் குறுக்கு தெரு மற்றும் சந்திற்கு மழைநீர் வடிகால்வாயுடன் சிமெண்ட்தளம் அமைத்தல் மற்றும் காமராஜர் நகர் 3-வது தெருவிற்கு சிமெண்ட்தளம் அமைத்தல் | 9.90 |
| 2 | வார்டு எண்12-ல் மு.க.கொல்லை பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 6.50 |
| 3 | வார்டு.எண்.36-ல் இந்திரா நகர் (வடக்கு) 4-வது தெருவிற்கு மழைநீர் வடிகால்வாயுடன் சிமெண்ட்தளம் அமைத்தல் | 7.75 |

**அலுவலகக் குறிப்பு:**

அ. மேற்குறிப்பிட்டுள்ள பணிகளை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்க்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.

ஆ. மேற்கண்ட பணிகளீன் அவசர அவசியத்தை கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.243/2018/இ1
தீர்மான எண்.339: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

3. இந் நகராட்சியில் கல்வி நிதியின் கீழ் மேற்க்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு 16.03.2018-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரு.இலட்சத்தில்) | ஒப்பந்தாரர் பெயர் (திரு/திருமதி) | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | கஸ்பா.அ.நகராட்சி துவக்கப் பள்ளியில் உள்ள வகுப்பறைகளில் பழுதடைந்துள்ள குழல் விளக்குகள்,மின்விசிறிகளை அப்புறப்படுத்திவிட்டு கூடுதலாக குழல் விளக்குகள்,மின்விசிறிகளை பொருத்துதல் மற்றும் தலைவர்களின் பழைய வண்ணப்படங்களை புதியதாக வர்ணம் தீட்டி பொருத்துதல். | 3.00 | 1.ஜி.பிரபாகரன்<br><br>2.ஆர்.இசைசெல்வ முர்த்தி | 0.06% மதிப்பீட்டைவிட குறைவு<br><br>0.95% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 2 | கஸ்பா.பி.நகராட்சி துவக்கப் பள்ளியில் ஆசிரியர்களுக்கான கழிப்பறை புதியதாக கட்டுதல்,பழுதடைந்துள்ள கதவுகள் மற்றும் ஜன்னல்களை அகற்றி புதியதாக பொருத்துதல்,வர்ணம் அடித்தல் மற்றும் பள்ளி சுற்று சுவரில் தேசத்தலைவர்களின் படங்களை வரைதல். | 6.75 | 1.ஜி.பிரபாகரன்<br><br>2.ஆர்.இசைசெல்வ முர்த்தி | 0.06% மதிப்பீட்டைவிட குறைவு<br><br>0.95% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 3 | கோவிந்தாபுரம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் உள்ள கழிவறையினை உயர்த்தி மேற்கூரை அமைத்தல்,பள்ளி முகப்பு வாயிலில் உள்ள பிரதான கட்டிடத்தின் கூரைகளில் பழுதடைந்துள்ள டைல்ஸ்களை அப்புறப்படுத்திவிட்டு புதியதாக அமைத்தல்,பள்ளி வகுப்பறைகள், ICDS கட்டிடம்,மற்றும் சத்துணவு கட்டிடம் ஆகியவற்றிற்கு வர்ணம் பூசுதல். | 7.90 | 1. ஜி.பிரபாகரன்<br><br>2.ஆர்.இசைசெல்வ முர்த்தி | 0.06% மதிப்பீட்டைவிட குறைவு<br><br>1.10% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலகக்குறிப்பு:- மேற்க்குறிப்பிட்டுள பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள திரு.ஜி.பிரபாகரன் ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகரிக்கலாம்.
ந.க.எண்.68/2018/இ1

தீர்மான எண்.340: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4. இந்நகராட்சி பகுதியின் குடிநீர் விநியோக குழாய்களில் குடிநீர் விநியோகத்தின் போது அழுத்தம் மற்றும் வால்வு இயக்கத்தினால் வெடிப்புகள் ஏற்பட்டு குடிநீர் விநியோகத்தின் போது ஏற்படும் கசிவுகளை உடனுக்குடன் பழுதுநீக்கம் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.3.00லட்சத்திற்கும் (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி பணிக்கு தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று 16.03.2018-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | 1. ஜி.பிரபாகரன் | 0.08% மதிப்பீட்டை விட குறைவு |
| | 2. எம்.உதயகுமார் | 0.80% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு: 1.அங்கீகாரம் வழங்கலாம்.மேற்கண்ட செலவினத்தை குடிநீர்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

2. மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும், பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

3. மேற்கண்ட பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. ஜி.பிரபாகரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.240/2018/இ2
தீர்மான எண்.341: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5. இந் நகராட்சியில் தேசிய நகர்புற சுகாதார இயக்க திட்டத்தின் கீழ் புதியதாக கட்டப்படவுள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்க வேண்டி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,வேலூர் அவர்கள் மூலம் தினசூரியன் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு அந் நாளிதழின் பில் பட்டியல் எண்.1176 நாள்.09.03.2018-ன்படி விளம்பரக் கட்டணத் தொகை ரூ.14280/-ஐ மேற்படி நாளிதழுக்கு செலுத்த அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அங்கீகாரம் வழங்கலாம்.மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.514/2015/இ1

தீர்மான எண்.342: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

6. இந் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், (Swachh Survekshan.2018) தூய்மையான நகராட்சிக்கான கணக்கெடுப்பு நடத்தப்பட இருப்பதையொட்டி, ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி எல்லைக்குட்பட்ட வணிக பகுதிகளில் ( Commercial Areas) 100அடிக்கு ஒரு100 லிட்டர் கொள்ளளவு கொண்ட (Twin Bin) பச்சைவண்ணம் (ம) நீல வண்ணம் ஆகிய இரு வண்ணங்களில் மக்கும்குப்பை, மக்காத குப்பை என தரம்பிரித்து சேகரிக்க 10 எண்ணிக்கை பின்கள் வைக்கவும் மற்றும் இந்நகராட்சி உரக்கிடங்கு பகுதியில் இரும்பு வலை வேலி அமைத்தல் ஆகிய பணிக்கு 13.03.2018-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விலாசம் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | 1. எம்.தீனதயாளன்<br><br>2. வி.பாஸ்கர் | 0.06% மதிப்பீட்டை விட குறைவு<br><br>0.90% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு: அ.மேற்கண்ட பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. எம்.தீனதயாளன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

ஆ.மேற்கண்ட பணியினை உடன் மேற்கொண்டு முடிக்கப்படவேண்டிய அவசர அவசியம் கருதி தனி ஆலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. எம்.தீனதயாளன், ஒப்ந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்

ந.க.எண்.26/2018/இ1
தீர்மான எண்.343: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

7. ஆம்பூர் நகராட்சியில் உள்ள இரண்டு உரக்கிடங்கில் தற்போது தார்வழி உரக்கிடங்கு பயன்பாட்டில் உள்ளது. 36 வார்டுகளில் தினசரி சேகரமாகும் 45 மெட்ரிக் டன் திடக்கழிவுகளை குறைக்கும் வகையில் 4.00 மெட்ரிக் டன் நுண்ணுயிர் திடக்கழிவு மையம் (Micro Compost Centre) மற்றும் திடக்கழிவு செயலாக்கத்திற்கு தேவையான இயந்திரம் (Machines) அமைத்து பணி மேற்கொண்டால் திடக்கழிவுகள் குறைய வாய்ப்புள்ளது.

எனவே, நகராட்சி எல்லைக்குட்பட்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் திடக்கழிவுகளை சேகரம் செய்ய மையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.மேற்கண்ட பகுதியில் நுண்ணுயிர் திடக்கழிவு மையம் அமைத்து செயலாக்கத்திற்கு கொண்டு வந்தால் சுமார் 4 மெட்ரிக் டன் வரை திடக்கழிவுகளை நகராட்சி பகுதிகளில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளாக தரம் பிரித்து பணிகள் மேற்கொள்ளப்படும். இதனால் தார்வழி உரக்கிடங்கிற்கு தினசரி எடுத்து செல்லும் 45 மெட்ரிக் டன் பதிலாக 41 மெட்ரிக் டன் மட்டும் எடுத்துச் செல்ல ஏதுவாக இருக்கும்.

இப்பணிகள் 4 வார்டுகளில் இருந்து குப்பைகள் சேகரித்து 1 இடத்தில் மேற்கொண்டால் “Zero Waste” திடக்கழிவு இல்லாமலும் மற்றும் பிளாஸ்டிக் அல்லாத நிலை ஏற்படும். எனவே, இதனை கருத்தில் கொண்டு முதற்கட்டமாக மேற்கண்ட இடத்தினை தேர்வு செய்யப்பட்டு அதற்கான மதிப்பீடு தொகை ரூ.48.00 இலட்சம் மதிப்பீட்டில் 1 நுண்ணுயிர் திடக்கழிவு சேகரம் மையம் தூய்மை இந்தியா திட்டத்தில் (SBM) மேற்கொள்ள நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரணை அனுப்பி அனுமதி பெற வேண்டி தேர்வு செய்யப்பட்ட பணிக்கு அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:-</u>**

1. அனுமதிக்கலாம்.
2. தேர்வு செய்யப்பட்ட 1 இடத்தில் நுண்ணுயிர் திடக்கழிவு மையம் அமைக்க ஒப்புதல் வழங்கலாம்.
3. முதற்கட்டமாக வார்டு எண்.11 பகுதியில் நுண்ணுயிர் திடக்கழிவு மையம் ரூ.48.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கவும், மேற்படி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் பிரேரணை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்கள் மூலமாக அனுமதி பெற மன்றம் அனுமதி வழங்கலாம்.
4. இந்நகராட்சியில் தினசரி மேற்கொள்ளப்படும் அத்தியாவசிய பணிகளுக்கு போதிய நிதி ஆதாரம் இல்லாத நிலையில், மேற்படிபணிக்கான மொத்த மதிப்பீட்டு தொகையினை திடக்கழிவு மேலாண்மை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அரசின் முழு மான்யமாக (100%) பெற்று, மேற்படி திட்டத்தினை செயல்படுத்திட அனுமதிக்கலாம்.

ந.க.எண்:- இ1/331/2018

தீர்மான எண்.344: அனுமதிக்கப்பட்டது

**8.** ஆம்பூர் நகராட்சி 2008–ஆம் ஆண்டு முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நகராட்சியாகும். இதன் மொத்த பரப்பளவு 17.97 சதுர கி.மீ. ஆகும். 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 113856 ஆகும். வார்டு எண்ணிக்கை 36 ஆகும். தற்போது நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 80 நபர்கள். தினசரி சேகரம் ஆகும் குப்பையின் அளவு 45 மெட்ரிக் டன் ஆகும். முதல் நிலை குப்பை சேகரிக்கும் பணிக்கு 54 தள்ளு வண்டிகளும்.40 டிரை சைக்கிள் ரிக்ஷாக்களும்,6மினி ஆட்டோ வாகனஙகளும், இரண்டாம் நிலை சேகரித்திற்கு 3 டிப்பர் லாரிகள் மற்றும் 3 டம்பர் பிளேசர் வாகனஙகளும் பயன்பாட்டில் உள்ளது. மேலும் தனியார் மயம் மூலம் 120 நபர்களை கொண்டு 20 வார்டுகளில் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது தூய்மை இந்தியா திட்டம் 2015–16–ன் கீழ் ரூ.348.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சிக்கு சொந்தமான தார்வழி உரக்கிடஙகில் குப்பைகள் தரம் பிரிப்பதற்கான கட்டமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆம்பூர் நகராட்சிக்கு சொந்தமான உரகிடஙகு தார்வழி பகுதியில் 8.77 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.மேற்படி உரகிடஙகு பகுதியில் பல ஆண்டுகளாக சேகரிக்கப்பட்டுள்ள மரபுவழி கழிவுகளை(Legacy Waste) திடக்கழிவு மேலாண்மை – தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தாது பொருட்களாக (Bio Mining) மாற்றிட உத்தேசிக்கப்பட்டுள்ளது,

எனவே, மேற்படி இரண்டு உரகிடஙகு பகுதிகளில் உள்ள மரபுவழி கழிவுகளை(Legacy Waste) தாது பொருட்களாக (Bio Mining) மாற்றிட ரூ.1138.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும், மேற்படி பணியினை திடக்கழிவு மேலாண்மை தூய்மை இந்தியா திட்டத்தில் (SBM) மேற்கொள்ள திட்ட பிரேரணையை நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர்,சென்னை அவர்களுக்கு அனுப்பி நிர்வாக அனுமதி பெற அனுமதி கோரப்படுகிறது,

<u>**அலுவலககுறிப்பு:-** </u> **1**அனுமதிக்கலாம்.

**2.**மேற்படி பணிக்கான திட்ட பிரேரணையை நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர்,சென்னை அவர்களுக்கு நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர்,வேலூர் அவர்கள் மூலமாக அனுப்பி நிர்வாக அனுமதி பெற அனுமதி வழஙகலாம்.

**3.**இந் நகராட்சியில் தினசரி மேற்கொள்ளப்படும் அத்தியாவசிய பணிகளுக்கு போதிய நிதி ஆதாரம் இல்லாத நிலையில், மேற்படி பணிக்கான மொத்த மதிப்பீட்டு தொகையினை திடக்கழிவு மேலாண்மை – தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அரசிடமிருந்து முழு மான்யமாக (100%) பெற்று மேற்படி திட்டத்தினை செயல்படுத்திட அனுமதிக்கலாம்,

ந,க,எண்.இ1/230/2018

தீர்மான எண்.345: அனுமதிக்கப்பட்டது

9. அரசாணை (நிலை)எண்.157, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA IV) துறை, நாள் 03.11.2016ல் " செயலாளர், இந்திய ரெட்கிராஸ் சங்கம், வேலூர் கிளை அவர்களுக்கு வருடந்தோறும் நகராட்சி சார்பாக உறுப்பினர் சந்தா தொகை ரூ.2500/-வீதம் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே 2014-15 முதல் 2018-19ம் ஆண்டு வரை சந்தா தொகை ரூ.12500/-ஐ (ரூபாய் பனிரெண்டாயிரத்து ஐநூறு மட்டும்) செயலாளர், இந்தியன் ரெட் கிராஸ் சங்கம், வேலூர் அவர்களுக்கு செலுத்த அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம்.

ந.க.எண்.359/2018/அ2

தீர்மான எண்.346: அனுமதிக்கப்பட்டது

**10.** ஆம்பூர் நகராட்சியில் அரசு வழங்கும் மான்யம் விலையில் அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் கீழ் நகர்புறத்தில் வசிக்கும் மகளிருக்கு இருசக்கர வாகனம் வாங்க நகராட்சி அலுவலகம் மூலமாக விண்ணப்பங்களை வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர்,வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.அ**3/068/2018**,நாள்:20.01.**2018**ன்படி மான்ய விலை அம்மா இருசக்கர வாகன விண்ணப்பங்களை உள்ளூர் அச்சகத்தில் அச்சடித்து கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.**25000**/க்கு அனுமதி கோரப்படுகிறது.அவசர அவசியம் கருதி லிண்ணப்பஙகள் அச்சடித்து வழஙக பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளி வரப்பெற்ற அச்சகத்தின் பெயர் மற்றும் விலாசம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | எஸ்.சரவணன்,<br>கிங் ஆப்செட் பிரிண்டர்ஸ், வி.ஏ.கரீம் ரோடு,ஆம்பூர் | ரூ.10/–<br>(ஒரு விண்ணப்பத்திற்கு) |
| 2. | உமா ஆப்செட் &கிராபிகஸ்<br>நெ.21,பிராட் பஜார்,<br>ஆம்பூர் | ரூ.12/–<br>(ஒரு விண்ணப்பத்திற்கு) |
| 3. | சாரதா கம்பியூட்டர்ஸ்<br>சோமலாபுரம்,<br>ஆம்பூர் | ரூ.13/–<br>(ஒரு விண்ணப்பத்திற்கு) |

அலுவலக குறிப்பு– அ) மேற்குறிப்பிட்டுள்ள மூன்று விலைப்புள்ளிகளில்வ.எண்.1.ல் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைப்புள்ளியினை அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி செலவினத்தை வருவாய் நிதியலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.74/2018/அ2

தீர்மான எண்.347: அனுமதிக்கப்பட்டது

11. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொது மக்களின் சுகாதாரத்தை பேணி காக்கும் வகையில் கொசுவினால் பரவக்கூடிய காய்ச்சல் மற்றும் தொற்று நோய்களை தடுக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தின் அறிவுரைகளின்படி தடுப்பு நடவடிக்கைகள் மேற்க்கொள்ள வேண்டி கொசுப்புழு ஒழிப்பு பணிக்காக மகளிர்குழு உறுப்பினர்களை கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நிர்ணயம் செய்த ஊதியத்தின் அடிப்படையில் வீடு வீடாக சென்று தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்தும் பணி மற்றும் அபேட் கரைசல் ஊற்றி கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி கொசுப்புழு ஒழிப்பு பணியை தொடர்ந்து மேற்க்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் 2571/ஜே1/2017 நாள்.14.02.2017, மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் மற்றும் துணை இயக்குனர், சுகாதாரப்பணிகள், திருப்பத்தூர் ஆகியோர்கள் ஆய்வுக் கூட்டங்களில் தெரிவித்துள்ள நெறிமுறையடியும், மேற்படி பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் அவர்கள் நிர்ணயம் செய்துள்ளவாறு நபர் ஒருவருக்கு ரூ.254/- என்ற தினக்கூலி அடிப்படையில் 65 எண்ணிக்கை கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு மேற்படி பணியை மேற்க்கொள்ளவும் அதற்காகும் செலவுத் தொகை ரூ.2.00லட்சத்திற்கும் (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அ. அனுமதிக்கலாம்.

ஆ. நகராட்சி பகுதிகளில் வசிக்கும் பொது மக்களின் நலனை கருதியும், பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதியும் 65 எண்ணிக்கை கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களைக் கொண்டு மேற்படி பணியை செய்யயவும் அதற்காகும் செலவுத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.176/2014/எச்1
தீர்மான எண்.348: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

12. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 24 வரையுள்ள பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகளை தனியார்மூலம் 2018-2019ம் ஆண்டு மேற்க்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.299, நாள் 2.2.2018ல் அங்கீகாரம் பெற்று 27.3.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|
| 1. எஸ்.அருணாசலம்<br><br>2. ஏ.வி.நாகராஜன் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு.<br><br>1.25% மதிப்பீட்டை விட அதிகம். |



அலுவலகக்குறிப்பு: மேற்கண்ட பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.அருணாசலம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.
ந.க.எண்.141/2018/இ2
தீர்மான எண்.348: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

13. இந்நகராட்சி பகுதியில் கோடைக்காலத்தில் ஏற்படும் வெப்பத்தாக்கத்திலிருந்து பொது மக்கள் தங்களை தற்காத்துக்கொள்ள செய்ய வேண்டிய செயல்கள் மற்றும் செய்யக்கூடாத செயல்கள் பற்றிய விளக்க விவரங்களை 8′ X 5′ (VINYL BOARD) விளம்பர பலகைகள் மற்றும் இரும்பு கம்பங்கள் உட்பட 10 எண்ணிக்கை தயார் செய்து பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் பொருத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/-க்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு: மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவுத் தொகையினை வருவாய் நிதி தலைப்பீன் கீழ் செலவு செய்ய அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண். 214/2018/இ2

தீர்மான எண்.350: அங்கீகரிக்கப்பட்டது

14. இந் நகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை கிணறுகளில் உள்ள மினிபவர் பம்ப் நீரேற்று நிலையங்களில் உள்ள மற்றும் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகளில் உள்ள மின்மோட்டார் திறந்தவெளி கிணற்றில் உள்ள மின்மோட்டார்கள், ஆழ்துளை கிணறுகளில் உள்ள பவர் பம்ப் மோட்டார்கள், பொது கழிப்பிட கிணறுகளில் உள்ள மின்மோட்டார்கள், நகராட்சி பள்ளிகளில் உள்ள மின்மோட்டார்கள் என மொத்தம் உள்ள 507 மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யவும், பராமரிப்பு செய்யவும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.7.00லட்சத்திற்கு மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகின்றது.
அலுவலகக்குறிப்பு:அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை குடிநீர் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண். 347/2018/இ2

தீர்மான எண்.351: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

15. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேடான மற்றும் பைப்லைன் இல்லாத பகுதிகளுக்கு 6000லிட்டர் கொள்ளளவு கொண்ட தனியார் லாரி மற்றும் டிராக்டர்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு தீர்மான எண் 270 நாள்: 14.12.2017-ல் தொகை ரூ.5.00லட்சத்திற்கு அங்கீகாரம் பெற்று 01.02.2018-ம் தேதி வரை பணிகள் மேற்கெள்ளப்பட்டதில் ஏற்பட்ட கூடுதல் செலவினத் தொகை ரூ.27436/-க்கு அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. குடிநீர் விநியோக பணியின் அவசியத்தை கருதி மேற்கண்ட பணிக்கு ஏற்பட்ட கூடுதல் செலவின தொகைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை குடிநீர்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1340/2017/இ2
தீர்மான எண்.352: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

ஒம்/- இல.குமார்,
தனி அலுவலர்,
ஆம்பூர் நகராட்சி

/உண்மைநகல்/

தனி அலுவலர்,
ஆம்பூர் நகராட்சி